## ஜம்மு – காஷ்மீர் மாநிலம் – பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து – பல

# விலை மதிப்பற்ற உயிர்களைப் பறித்த தீவிரவாதத் தாக்குதல் காட்டுமிராண்டித்தனமானது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்! புதுடெல்லி ‘தமிழ்நாடு இல்லத்தில்’

## சிறப்பு உதவி மையம் அமைத்து முதல்வர் நடவடிக்கை!

**சென்னை, ஏப். 24–**

**ஜம்மு – காஷ்மீர் மாநிலம், பஹல்காமில் பல விலைமதிப்பற்ற உயிர்களைப் பறித்த தீவிரவாதத் தாக்குதல் காட்டு மிராண்டித் தனமானது என்றும் – கடும் கண்டனத்திற்குரியது என்றும் பதிவிட்டுள்ளார், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!**

**ஜம்மு–காஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பஹல்காம் பகுதியில் தீவிரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் இயங்கும் சிறப்பு உதவி மையம் தொடங்கப்படவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.**

*அதன் விவரம் வருமாறு:*

ஜம்மு-காஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசரான் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாவிற்குச் சென்றிருந்த பொது மக்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்தகவலை கேள்விப்பட்டவுடன், தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாக்கும் முகமாக முதற்கட்டமாக அவர்களுக்கு தொடர்பு கொள்ள ஏதுவாக புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் உதவி மையம் தொடங்கப்பட்டு, 011-24193300 (Land line), 9289516712 (Mobile Number with Whatsapp) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், 24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் அப்பகுதி மக்களின் தேவைகளை அறிந்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

இதற்காக புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையாளர் (Resident Commissioner) அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், அவர்களை நேரடியாக ஜம்மு-காஷ்மீர் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதிக்குச் சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும் தேவையான மருத்துவ வசதிகளை வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

*இச்சம்பவம் அறிந்து மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவு வருமாறு:*

**ஜம்மு – காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகளைக் குறிவைத்து, பல விலைமதிப்பற்ற உயிர்களைப் பறித்த காட்டுமிராண்டித்தனமான தீவிரவாதத் தாக்குதல் மனசாட்சியையே உலுக்குகிறது.**

**இது கடும் கண்டனத்துக்குரியது. சொந்தங்களை இழந்து தவிக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள்.**

**இத்தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்தோரும் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன். உடனடியாக, புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையரைத் தொடர்பு கொண்டு, ஜம்மு காஷ்மீர் மாநில அதிகாரிகளுடன் பேசி, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ஒருங்கிணைத்துத் தர அறிவுறுத்தியிருக்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, திருநாவலூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் சேந்தநாடு பகுதி அண்ணா திடலில் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்ட கவுன்சிலர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.வசந்தவேல் தலைமையில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் ஆடுதுறை உத்தராபதி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, அனைவரும் கழகத் தலைவரின் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர், இதில் உளுந்தூர்பேட்டை நகரக் கழகச் செயலாளர் த.டேனியல்ராஜ், திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மா.சந்திரசேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள், பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## வில்லியனூர் தொகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

### இரா. சிவா எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது!

*புதுச்சேரி, ஏப். 24–*

*வில்லியனூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் வில்லியனூர் சண்முகா திருமண நிலையத்தில் நேற்று காலை 10 மணிக்கு நடந்தது.*

*கூட்டத்திற்கு தொகுதி அவைத்தலைவர் ஜலால் அனீப் தலைமை வகித்தார். தொகுதி செயலாளர் மணிகண்டன் முன்னிலை வகித்தார். பொதுக்குழு உறுப்பினர் செல்வநாதன் வரவேற்று பேசினார்.*

*மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.*

*அப்போது அவர் பேசியதாவது: – தேர்தலில் ஒருவர் நிற்க வேண்டும் என்றால் அவர் நிற்கின்ற தொகுதியில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் மக்கள் பணியில் ஈடுபட்டு மக்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டும். அப்போது தான் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்து வாக்களிப்பார்கள். ஆனால் கடந்த 2021–ஆம் ஆண்டு தேர்தலில் தலைமைக் கழகம் சொன்னதற்காக என்னை 20 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்த மக்களை பிரிந்து முதல் முறையாக வில்லியனூரில் நின்றேன். என் மீது மக்கள் நம்பிக்கை வைத்து வெற்றி பெற செய்தார்கள். எதிர்த்து போட்டியிட்டவர் சாதாரண வேட்பாளர் இல்லை. செல்வாக்கு மிக்கவர் என்றாலும் மக்கள் என்னை தேர்வு செய்தார்கள். மக்கள் நம்பிக்கையை ஒருபோதும் நான் வீணடிக்க மாட்டேன். மக்களுக்கு அளித்த 90 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளேன். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆளும் கட்சியினர் அதிகாரிகளை மாற்றி பணி செய்ய தொடர்ந்து இடையூறு செய்தாலும்கூட வில்லியனூர் தொகுதி மக்களுக்கான வளர்ச்சிப் பணியை நான் தொடர்ந்து தொய்வில்லாமல் செய்வேன். மக்களுக்கான தேவைகள் நியாயமாக இருப்பதால் அதிகாரிகள் தடையின்றி திட்ட பணிகளுக்கு ஒப்புதல் அளித்து அதிகளவில் பணிகள் நடக்கின்றன. கஸ்தூரிபாய் திருமண மண்டபம், குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, சுல்தான் பேட்டை, ஜி.என்.பாளையம், தட்டாஞ்சாவடி உள்ளிட்ட ஊர்களில் உள்ள குளங்கள் மேம்படுத்தும் பணிகள் நடைபெற உள்ளன. உங்கள் பகுதியில் ஏதேனும் பணிகள் விடுப்பட்டிருந்தால் அதை என்னிடம் தெரிவித்தால் அப்பணியையும் இந்த ஓராண்டுக்குள் நிறைவேற்றி தருகிறேன். முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களுக்கு வில்லியனூர் அண்ணா சிலை பக்கத்தில் அவரது நினைவு நாளுக்கு முன் சிலை நிறுவப்படும்.*

*தேர்தலை மனதில் வைத்து மக்களை ஏமாற்றி போலி வாக்குறுதிகளை அளிக்கும் அரசாக இரட்டை என்ஜின் பூட்டிய அரசு இங்கு செயல்படுகிறது. புதுச்சேரி மாநிலத்தில் எந்த தொகுதியிலும் செய்யாத வளர்ச்சிப் பணிகளை நான் வில்லியனூரில் அதிகளவில் செய்துள்ளேன். அதை சாதனை புத்தகமாக வெளியிட்டு மக்களிடம் எடுத்து செல்ல வேண்டும். ஒன்றிய சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தில் ஒதியம்பட்டு ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோவில் ரூ. 69 கோடி செலவில் மேம்படுத்தப்பட உள்ளது. தொகுதியில் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள கோவில்கள் அனைத்து திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட கும்பாபிஷேகம் செய்யப்படும். பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்தாலும் கூட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவில்லையே என்ற கேள்வி எழும். உறுதியான நம்பிக்கையோடு இருங்கள் காலம் கட்டாயம் பதில் சொல்லும். தேர்தல் வருவதற்கு இன்னும் 10 மாதங்கள் மட்டுமே உள்ள காரணத்தால் தொகுதியில் உள்ள 38 பூத்களில் கமிட்டி அமைத்து பணியை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.*

*தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினர் ராமசாமி, தர்மராஜன், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், ஆதிதிராவிடர் அணி செல்வநாதன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாசு, அயலக அணி அமைப்பாளர் ஷாஜகான், தொமுச தலைவர் அங்காளன், ஆதிதிராவிடர் அணி பழநிசாமி, விவசாய அணி தலைவர் நாவப்பன் ஆகியோர் ஆலோசனைகள் வழங்கினர்.*

*இதில், மாநில துணைத் தலைவர்கள் ஹாஜ்பாய், தாஹா, கதிரவன், துணை அமைப்பாளர்கள் சரவணன், ராமதாஸ், காளி, தேசிங்கு, கலிமுல்லா, தொகுதி துணைச் செயலாளர்கள் ஜெகன்மோகன், அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர்கள் சேகர், சுப்ரமணி, அக்பர்அலி, ஏழுமலை, கமால்பாஷா, சிராஜிதீன், ராஜாமுகம்மது, சபரி, ராஜ் முகம்மது, முத்துப்பாண்டி, ரவி, தனசேகர், மிலிட்டரி முருகன், காளிதாஸ், ராஜ் முகம்மது, ரபீக், சரவணன், வீரக்கண்ணு, அன்புநிதி, அன்பு, ரகு, ரங்கராஜ், சகாபுதீன், பாலகிருஷ்ணன், சபாபதி, கலியபெருமாள், கிருஷ்ணமூர்த்தி, கந்தசாமி, ராஜேந்திரன், பாண்டியன், முத்துக்குமார், கோவிந்தராஜ், காசிநாதன், அமலோர் ஆசிரியர், சேகர், மணவாளன், தெய்வநாயகம், நாவப்பன், தர்மராஜ், அன்பகன், மணி, சத்துரு, முருகேசன், வாசு, மோகன், அருள்மணி, ஹரி, ஷர்மா, பிரவீன், முருகையன், ராமஜெயம், பாலமுருகன், திலகர், மனோ, தட்சிணாமூர்த்தி, அஞ்சாபுலி, ராஜேந்திரன், சகாபுதீன், நாகராஜ், சிலம்பு, வீரமுத்து, நூர்துநாதன், லட்சுமணன், ஜெயக்குமார், அபிமன்யு, சூர்யா, கோபி, தூசன், செழியன், வேல்முருகன், சிவக்குமார், முத்து, கோதண்டம், மணிபாலன், சிவக்குமார், அசார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

## யு.பி.எஸ்.சி. தேர்வில் மாணவர் சிவச்சந்திரன் முதலிடம்!

## நான் முதல்வன் திட்டம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி - பாராட்டு!

சென்னை, ஏப்.24-

“நான் முதல்வன்” திட்டத்தில் பயிற்சிபெற்றமாணவர்சிவச்சந்திரன் UPSC தேர்வில் அகில இந்திய அளவில் 23-வது இடமும், தமிழ்நாட்டு தரவரிசையில் முதலிடமும் பெற்று சாதனை படைத்ததற்காக வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**எது மகிழ்ச்சி?**

**நான் மட்டும் முதல்வன் அல்ல; தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முதல்வனாக என் பிறந்தநாளில் தொடங்கி வைத்த “நான் முதல்வன்” திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர் UPSC தேர்வில் தமிழ்நாட்டுத் தரவரிசையில் முதல்வனாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது!**

**பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் இந்தத் திட்டம், வருங்காலங்களில் இலட்சக்கணக்கானோரின் வாழ்வில் ஒளியேற்றிடும் என்ற நம்பிக்கை என் மகிழ்ச்சியாகியுள்ளது!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா புலவர் வேங்கைமார்பன்

**ஏப்ரல் 24 (1985)**



**அன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் கழகப் பிரச்சாரக்குழு தலைவராகப் பணியாற்றியவர்.**

**தந்தை பெரியார், அறிஞர்அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறுப் போராட்டங்களில் பங்கேற்றதுடன், 1965இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, வேலூரில் ஓராண்டு சிறைவாசமும் – நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சென்னையில் ஓராண்டு சிறைவாசமும் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஐ. வெங்கட்ராமன்

**ஏப்ரல் 24 (2020)**



**தி.மு.கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.**

**திருவொற்றியூர் நகர அமைப்பு துவங்கப்பட்டபோதே, அதன் முதல் செயலாளராகவும் – ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டக் கழக அவைத்தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.**

**திருவொற்றியூர் எண்ணூர் தொழிற்சங்கப் பேரவையை முதன்முதலாக துவக்கியதோடு, நகர்மன்ற துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி, சைதாப்பேட்டை நிலவள வங்கி, அறிஞர் அண்ணா பட்டுக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் இயக்குநராகவும் இருந்தவர்.**

**“திசை மாறாத பறவை” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**